# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.21 (L.W.42)

| | | | |
|---|---|---|---|
| Name | : Sivakumar | Caste | : Reddy |
| Father's Name | : Ethirajulu | Calling | : SSI of Police |
| Village | : Ariyur | Religion | : Hindu |
| Taluk | : Vellore | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

முதல் விசாரணை

நான் தற்போது வேலூர் அரியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 1 முதல் 5 எதிரிகளை தெரியும். அவர்கள் காவல்துறையை சார்ந்தவர்கள். கடந்த 2012 முதல் 2016 வரை ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன்.

16.06.2015 அன்று காலை 10 மணிக்கு ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் இருந்தபோது, ஷமில் பாஷா மற்றும் 2 இருவர் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்கள்.

அ.சா.ஆ.14ல் 7ம் தாளில் உள்ள ஷமில்பாஷாவின் ஒளிநகல் புகைப்படத்தை காண்பித்து சாட்சி அயைாளம் காட்டினார். (அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதுகுறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்).

தங்களுக்கு ஒரு சந்தேகம் இருப்பதாகவும், கிளியர் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். உள்ளே உள்ள உதவி ஆய்வாளரை போய் பாருங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் சின்ன சந்தேகம் தான் நீங்களே அதை கிளாரிபை செய்யுங்கள் என்று சொன்னார்கள்.

நான், அவர்களிடம் என்ன விஷயம் சொல்லுங்கள் என்று கேட்டபோது, பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பவித்ரா என்ற பெண் காணாமல் போய்விட்டது, அது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றும், அவர்கள் சொந்தக்காரர்கள் என் வீட்டினிடம் வந்து சண்டை போட்டுவிட்டு போய்விட்டார்கள் என்றும், தற்போது பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அவர்களை விசாரணைக்கு வரச்சொல்லி இருப்பதாகவும் சொன்னார்கள்.

மேலும், தாங்கள் ஆம்பூர் நகரத்தை சேர்ந்தவர்கள் என்றும், அங்கு தான் விசாரணைக்கு வந்தோம் என்றும், அதற்கு அங்கு தான் வழக்கு போட்டு உள்ளார்கள், நீங்கள் அங்கு தான் விசாரணைக்கு போகவேண்டும் என்று சொன்னேன். அவர்கள் அதற்கு சரியென்று போய்விட்டார்கள். அதற்கு பின்னர் ஒரு மணி நேரம் கழித்து பள்ளிகொண்டா காவல் நிலையத்தை சேர்ந்த SSI Ravi என்பவர் பவித்ரா வழக்கு சம்மந்தமாக யாராவது வந்தார்களா என கேட்டார். நான் அவரிடம் வந்தார்கள் என்றும், அவர்களை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு போய் பார்க்கும்படி அனுப்பிவிட்டதாக சொன்னேன். இவ்வழக்கு சம்மந்தமாக என்னை 8.07.2016 ம் தேதி DSP CBCID அவர்கள் விசாரணை செய்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

16.06.2015 ம் தேதி நான் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் ஜெனரல் டியுட்டியில் இருந்தேன். பொதுவாக ஒரு வழக்கு சம்மந்தமாக யாராவது வந்து விசாரித்தால் G.D. பதிவு செய்வோமா என்றால் G.D. entry–ல் உள்ளவர் தான் பதிவு செய்வார். என்னிடம் 3 பேர் வந்து தகவல் கேட்டபோது, அவர்களின் அடையாள அட்டை எதுவும் நான் வாங்கி வைக்கவில்லை.

சம்பவத்தின்போது துளசிராமன் என்பவர் G.D. பொறுப்பில் இருந்தார். வேறு காவல் நிலையத்தில் இருந்து போன் செய்தால், அந்த காவல் நிலையத்தில் யார் G.D. பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்கள் தான் போனை அட்டன்ட் செய்து தகவல் கொடுப்பார்கள் என்றால் சரிதான். என்னை வேறு ஒரு காவல் நிலையத்தில் இருந்து போன் மூலம் கேட்ட தகவலை G.D.யில் பதிவு செய்யவேண்டும் என்றால் வழக்கு சம்மந்தமாக என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

மேற்படி சம்பவம் எதுவும் நடக்காமல், CBCID போலிசார் கேட்டுக் கொண்டதின் பேரில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி நடந்து இருந்தால் G.D.யில் பதிவு ஆகியிருக்கும் என்றாலும், நான் வாங்கி வைத்திருப்பேன் என்றால் சரியல்ல.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

16.06.2015 அன்று எனக்கு இரவு பணி. அன்று G.D. பொறுப்பில் இருந்த துளசிராமனுக்கு தான் எங்கள் காவல் நிலையத்திற்கு யார் வந்தார்கள் என்ற விவரம் தெரியும். எனவே ஷமில் பாஷாவை நான் பார்த்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. நான் பார்த்திருக்கிறேன். CBCID போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் முன்னுக்கு முரணாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றும், உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரில் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முக்கிய தகவல்கள் தொலைபேசி மூலம் காவல் நிலையத்திற்கு வருவதை ஒரு பதிவேட்டில் எழுதவேண்டும். அந்த பதிவேட்டை CBCID போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ஷமில் பாஷாவை பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.22 16:19:28 +0530